கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி., பெரம்பலூர் மாவட்டம், பீல்வாடி கிராமத்தைச் சேர்ந்த கழக பொதுக்குழு உறுப்பினர் டி.கே.இராமச்சந்திரன் இல்லம் சென்று அவரது உடல்நலம் விசாரித்தார். உடன் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றியச் செயலாளர்கள் மா.இராஜ்குமார், வேப்பூர் தி.மதியழகன், டாக்டர் செ.வல்லபன், மருத்துவர் அணி மாவட்ட தலைவர் டாக்டர் ஈ.டி.ஜெயலட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ரயில்வே மேம்பாலம் அருகில் சித்தர்காடு சந்தைப்பேட்டையில் ஏற்பட்ட தீ வீபத்தில் மூன்று வீடுகள் எரிந்து சேதம் ஏற்பட்டது. முற்றிலுமாக தீக்கிரையாகின. இந்த தீ விபத்தில் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட மூன்று குடும்பத்தினரை மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான நிவேதா முருகன் நிதி உதவி மற்றும் அரிசி மளிகை பொருள்கள், வீட்டு உபயோக பொருட்கள் உள்ளிட்டவற்றை வழங்கி ஆறுதல் தெரிவித்தார். உடன் மாவட்ட கழக துணை செயலாளர் எஸ்.செல்வமணி, மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம். மூர்த்தி, மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். கே.மருது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஜூன் 12-ஆம் தேதி – மேட்டூர் அணை திறக்கப்படவில்லை!

டெல்டா விவசாயிகளிடம் கைவிரித்த த.வெ.க. அரசு!

த.வெ.க அரசின் அறிவிக்கப்படாத மின் தட்டுப்பாட்டால், கருகும் பயிர்கள்!

தஞ்சை, ஜூன் 13-

டெல்டா பாசனத்துக்காக வழக்கமாக ஜூன் 12ம் தேதி திறக்கப்படும் மேட்டூர் அணை, இந்த வருடம் திறக்கப்படவில்லை. த.வெ.க. அரசின் அறிவிப்பால், குறுவை சாகுபடியின் பரப்பளவு 50 சதவீதம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் குறுவை, சம்பா, தாளடி பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ள மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி நீர் திறக்கப்படுவது வழக்கம்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் ஜூன் 12ம் தேதிக்கு முன்னதாகவே தண்ணீர் திறக்கப்பட்டதால், டெல்டா விவசாயிகள் பயனடைந்து, சாகுபடியை அதிகரித்தனர். புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு மேட்டூர் அணை 12ம் தேதி திறக்கப்படாது என அறிவித் துள்ளது. நீர்வளத்துறையின் அறிவிப்பால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். டெல்டா மாவட்டங்களில் சுமார் 6 லட்சம் ஏக்கரில் செய்ய வேண்டிய குறுவை சாகுபடியின் பரப்பளவு 50 சதவீதம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்படாத நிலையில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு காரணமாக மோட்டார் பழுதடைவதாகவும் விவசாயிகள் குற்றச்சாட்டியுள்ளனர். த.வெ.க. ஆட்சியில் விவசாயத்திற்கு மும்முனை மின் சாரம் வழங்கப்படவில்லை என்றும், குறைந்த மின் அழுத்த மின்விநியோகம் காரணமாக பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டு பயிர்கள் கருகி வருவதாகவும் விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

“யார் ஆட்சி நடக்கிறது என தெரியாமல் ஆட்டம் போடுகிறீர்கள்”

வீடியோவை வெளியிட்டால் சஸ்பெண்ட்! திருப்பூரில் காவலர்களை மிரட்டிய த.வெ.க. போதைக் கும்பல்!

பொது இடத்தில் பிறந்த நாள் கேக் வெட்டி குடிபோதையில் பெண்களிடம் அடாவடி!

திருப்பூர், ஜூன் 13 -

‘யார் ஆட்சி நடக்கிறது என தெரியாமல் ஆட்டம் போடுகிறீர்கள்’ வீடியோவை வெளியிட்டால் சஸ்பெண்ட் என மிரட்டிய வீடியோ வைரல் ஆகியுள்ளது. திருப்பூரில் குடிபோதையில் பொது இடத்தில் பிறந்தநாள் கேக் வெட்டி பெண்களிடம் அடாவடியில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்ய வந்த காவல்துறையினரை தகாத வார்த்தைகளில் பேசி, மிரட்டிய த.வெ.க. போதை கும்பலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பின்னலாடை நகரான திருப்பூரில் பல்வேறு மாவட்டம், மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் குடும்பத்துடன் தங்கி பணியாற்றி வருகின்றனர். திருப்பூரில் நாளுக்கு நாள் போதை கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. தினசரி கஞ்சா, குட்கா விற்பனை செய்பவர்களை கண்டறிந்து காவல்துறையினர் நடவடிக்கை எடுத்தாலும் விற்பனை குறைந்த பாடில்லை. தற்போது புக்கிங் முறையில் கஞ்சா, குட்கா விற்பனை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் திருப்பூர் திருமுருகன்பூண்டி முருகன்பூண்டி காவல் நிலையம் அருகில் தனியாருக்கு சொந்தமான உள்விளையாட்டு அரங்கம் உள்ளது. இதில் விளையாடி வந்த ரஞ்சித் (27) என்பவருக்கு நேற்று முன் தினம் இரவு பிறந்த நாள். இதனை கொண்டாட அவர் ராக்கியாபாளையம், தேவராயம்பாளையம், அனுப்பர்பாளையம், பெரியாயிபாளையம் போன்ற பல்வேறு பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அதன் படி விளையாட்டு மைதானத்தின் முன் போதையில் கேக் வெட்டி கூச்சலிட்டனர். இந்த பகுதியில் வந்த பெண்களை கேலி, கிண்டல் செய்தனர். இது தவிர பட்டாசுகளை வெடித்து பொதுமக்களுக்கு இடையூறு செய்தனர். இது குறித்து பொது மக்கள் 100க்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு வந்து அனுப்பர்பாளையம் உதவி ஆணையாளர் பிரதீப் குமார், காவல் ஆய்வாளர் அழகு ராஜா மற்றும் காவலர்கள் விசாரணை நடத்தினர். அப்போது அங்கு கூடியிருந்த போதை கும்பல் காவலர்களை தகாத வார்த்தைகளில் திட்டி தாக்க முயன்றனர்.

மேலும், அங்கு சில இளைஞர்கள் காவல்துறையினரை வீடியோ எடுத்து “இந்த வீடியோவை வெளியிட்டால் நீங்கள் சஸ்பெண்ட் செய்யப்படுவீர்கள். யார் ஆட்சி நடைபெறுகிறது என தெரியாமல் ஆட்டம் போடுகிறீர்கள்” என ஒருமையில் மிரட்டிய சம்பவம் பொது மக்களை முகம் சுளிக்க வைத்தது.

வீடியோவில் த.வெ.க. அரசுக்கு ஆதரவாக பேசிதயதால் அவர்கள் தவெக வினராக இருக்கலாம். அல்லது தவெக ஆதரவாளர்களாக இருக்கலாம் என பொதுமக்கள் கூறினர்.

சம்பவம் தொடர் பாக திருமுருகன்பூண்டி காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். அங்கு கூடியிருந்த இளைஞர்களில் பலர் மீது கஞ்சா, கொலை மிரட்டல் போன்ற வழக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கோயிலுக்கு நீங்க வந்தா நாங்க ஏன் வெளியே போகணும்?

அமைச்சரிடம் பக்தர்கள் வாக்குவாதம்! தூய்மைப் பணியாளர்கள் முற்றுகையால் பரபரப்பு!

மதுரை, ஜூன் 13 -

மதுரை அழகர்கோவில் மலை மீது அமைந்துள்ள சோலைமலை முருகன் கோயிலில், அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் ஆய்விற்காக வந்தார். அப்போது, கோயிலில் இருந்த பக்தர்களை அதிகாரிகள் வெளியேற்றினர். இதனால், ஆத்திரமடைந்த பக்தர்கள், “சென்னை உள்ளிட்ட நீண்ட தூரத்தில் இருந்து சுவாமி தரிசனம் செய்ய வந்த எங்களை அமைச்சர் சுவாமி தரிசனம் செய்கிறார் என்பதற்காக வெளியே போகச் சொல்வது என்ன நியாயம்” என கேள்வி எழுப்பி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர், அமைச்சர் கோயிலில் வெளிப்பகுதியில் அமைந்துள்ள தேங்காய் கடையை ஆய்வு செய்தார்.

“தேங்காய், பழங்கள் எவ்வளவு விலைக்கு விற்கிறீர்கள்” என்றார். இதற்கு ரூ.200க்கு விற்பதாக கடைக்காரர்கள் தெரிவித்தனர். அதே நேரத்தில் கோயில் அதிகாரி ஒருவர், “100 ரூபாய்க்குத்தான் விற்கிறார்கள்” என்றார். இதற்கு அமைச்சர், “இருவேறு பதில்களாக இருக்கிறதே? விலைப்பட்டியலை பக்தர்களுக்கு தெரியும் வகையில் வைக்க வேண்டும்” என்றார்.

அப்போது அமைச்சரிடம் ஒருவர், “இங்கு நடைபெறும் கடை ஏலத்தில் ஒரு தரப்பினர் மட்டுமே கலந்து கொண்டு ஏலம் எடுக்கிறார்கள். மற்றவர்கள் யாரையும் ஏலம் எடுக்க அனுமதிப்பதில்லை” என குற்றம் சாட்டினார். அதற்கு அமைச்சர், “முறையாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

இதைத்தொடர்ந்து, 18ம் படி கருப்பணசாமி சன்னதியில் சுவாமி தரிசனம் செய்ய வந்த அமைச்சரை கோயில் தூய்மை பணியாளர்கள் முற்றுகையிட்டு, தங்களுக்கு முறையாக சம்பளம் வழங்குவதில்லை. நாளொன்றுக்கு ரூ.240 மட்டும் வழங்கப்படுகிறது.

பி.எப். பணம் பிடித்தாலும் அதற்கு முறையான தகவல் இல்லை என்றனர். இதையடுத்து அமைச்சர் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரை ரத்து செய்து, புதிய ஒப்பந்ததாரரை நியமிக்கு மாறு கூறி கிளம்பி சென்றார்.

திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, கணியூர் பேரூராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு திராவிடர் கழகத்தின் சார்பில் திராவிடர் கழக மாவட்ட தலைவர் கா.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி சிறப்புரையாற்றினார். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் கே.எம்.முபாரக்அலி , ஒன்றிய கழக செயலாளர் எம்.ஏ.சாகுல்அமீது உள்பட கழக நிர்வாகிகள், திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளைக் கொண்டாடிய

டி.யு.சி.எஸ்., தொ.மு.ச. நிர்வாகிகளுக்கு நோட்டீஸ்!

அமைச்சரின் பழிவாங்கும் செயலுக்கு கண்டனம்!!

சென்னை, ஜூன் 13 -

ஆண்டுதோறும் ஜூன் மாதம் 3ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்பிறந்தநாளையொட்டி அனைத்து அரசு அலுவலக சங்கங்கள் சார்பில் ஏழைகளுக்கு உணவு வழங்கப்படுவது வழக்கம்.

அதேபோல், இந்த ஆண்டும் திருவல்லிக்கேணியில் உள்ளநகரகூட்டுறவுசங்கத்தில் (டியுசிஎஸ்) மக்களுக்கு தி.மு.க.தொழிற்சங்கநிர்வாகிகள் அறுசுவை உணவு வழங்கினர்.

இந்நிலையில், தமிழக அரசுசார்பில், அமைச்சரின் உத்தரவின் பேரில் கூட்டுறவு இணைப்பதிவாளர் தேவிபிரியா இதுகுறித்து விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அதில், ‘டியுசிஎஸ் லிமிடெட்தி.மு.க.தொழிற்சங்க பொதுச்செயலாளர்ராஜன் சாமிநாதன் மற்றும் நிர்வாகிகள் 18 பேர், கடந்த 3ம் தேதி முன்னாள் முதல்வர் கலைஞரின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சங்க அலுவலகநுழைவாயிலில் பட்டாசுகளை வெடித்து, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயல்பட்டுள்ளனர் என்றும்,

மேலும், எவ்வித அலுவலக முன் அனுமதி ஏதும் பெறாமலும், சங்கஇணைப்பதிவாளர் அனுமதி பெறாமல்அவரின்அறையின்முன் உள்ளவரவேற்புஅறையில் உணவு விநியோகம் செய்யப்பட்டு சங்க விதிகளை மீறி உள்ளனர். எவ்வித எழுத்துபூர்வமான முன் அனுமதிபெறாமல்தன்னிச்சையாக செயல்பட்டுள்ளனர்.

எனவே அலுவலகவிதிமீறல்செயல்களுக்கானவிளக்கத்தை 3 தினங்களுக்குள் அளிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கழகத்தலைவர் அவர்களிடம், இந்நோட்டீஸ் குறித்து திருவல்லிக்கேணி டி.யு.சி.எஸ். தொ.மு.ச. நிர்வாகி ராஜன் சுவாமிநாதன் கூறினார்.

இது குறித்து டியுசிஎஸ் தொ.மு.ச.பொதுச்செயலாளர் ராஜன் சுவாமிநாதன் கூறும்போது, ‘தொழிற்சங்கங்கள் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த கட்சி தலைவர்கள் பிறந்தநாளை கொண்டாடுவது வழக்கம்.

கடந்த3ம்தேதிகலைஞர் பிறந்தநாள் கொண்டாடுவது குறித்து இணைப்பதிவாளர் தேவிபிரியாவிடம் தொலைபேசி வாயிலாக அனுமதி கேட்டுவிட்டு தான் அன்னதானம் வழங்கப்பட்டது. இதுதான் ஒவ்வொரு ஆண்டும் நடைமுறையாக உள்ளது. ஆனால், தற்போது தொ.மு.ச.நிர்வாகிகளை பழிவாங்க கூட்டுறவு துறை அமைச்சர் காந்தி ராஜ் உத்தரவின் பேரில் இணை பதிவாளர் நோட்டீஸ் வழங்கியுள்ளது கண்டிக்கத்தக்கது,’ என்றார்.

தொடர் மின்வெட்டால் விளைநிலங்கள் கடுமையாக பாதிப்பு!

பிரேமலதா விஜயகாந்த் அரசுக்கு வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 13 -

தொடர் மின்வெட்டால் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ச்சியாக நிலவி வரும் மின்வெட்டு காரணமாக, விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக பயிர்கள் வாடியதால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பையும் வேதனையையும் சந்தித்து வருகின்றனர்.

விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாக செயல்படுத்தப்படாதது ஒரு புறம்; மின் விவசாயிகள் பாதிக்கப்படுவது மறுபுறம். “உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி” என்பதுபோல் விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக மாறியுள்ளது.

எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

திருவொற்றியூரில் கலைஞர் பிறந்த நாள் விழா!

சென்னை, ஜூன்.13–

ஜூன் –3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி 4 வது வட்டத்தில் கழக இரு வண்ணக் கொடியேற்றி திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி 4 வது வட்ட திமுக சார்பில் எர்ணாவூர் பேருந்து நிலையம் அருகில் 3–6–26 காலை 10:00 மணியளவில் வட்ட கழக பொறுப்பாளர் ந. ராம்குமார் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நற்பணி மன்றத்தில் கழக கொடியேற்றி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் ஓங்குக என்று முழக்கமிட்டு அய்யா கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி இனிப்புகள் வழங்கினார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் எம்.வஜ்ரவேல், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் தழவை எஸ். ரஞ்சித் வட்டக் கழக நிர்வாகிகள் அ.இமானுவேல், க. சோழன் பி. எம். ஹரி, ஜி. பூங்கொடி, க.கண்ணன், எஸ். ராஜேஷ்,மு. பாபு, ஜி கணேஷ், எஸ்.தினேஷ், ஜெ.மாரிமுத்து, ஆர் பாலாஜி, எஸ்.வினோத், ரமேஷ் ரோனி, சோமசுந்தரம்,சர்க்கரை, தில்லை செல்வராஜ், ராமலிங்கம், லட்சுமிமேனன், சிவசங்கர், பொன்னம்பலம், பரந்தாமன், உதயகுமார் ஜெ. விக்னேஷ், லோகு, அப்பு,சுரேஷ், சதீஷ்குமார், ஜி. தினேஷ், அன்பரசன், கணேசன், மணிமேகலை, பாபு, பாட்ஷா, செந்தில் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கிராம நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தஞ்சை ந. பூபதி
ஜூன் 13 (2006)



தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.

தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.